பக்கங்கள்: ஆறு

26

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்




சொலிட்
பம்பையே வாங்குங்கள்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-

When, only The best is Good Enough



Buy
Solide Pumps

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞு ஆனி மீ 13 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 12 ( 27 - 06 - 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 116

இந்திய அரசு — விடுதலைப் புலிகள்

# இணக்க நிலைக்கான வாய்ப்பு; உடன்பாடு எந்நேரமும் வரும்?

## டிக்ஸிற் கொழும்பு திரும்பியதும் அறிவிக்கப்படும் என நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 27

இந்திய அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இணக்கநிலை ஏற்படுவதற்கான வாய்ப்பு உருவாகி உள்ளதாகவும்-

இரு சாராருக்கும் இடையில் எந்நேரமும் உடன்பாடு ஒன்று கைச்சாத்தாகலாம் என்றும்- சொல்லப்படுகிறது.

புதுடில்லி விரைந்துள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் கொழும்பு திரும்பியதும் உடன்பாடு பற்றி அறிவிக்கப்படலாம் எனவும் இங்கு நம்பிக்கை நிலவுகிறது.

சென்னையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரச அதிகாரிகளுக்கும் இடையில் காலத்துக்குக் காலம் இடம்பெற்றுவந்த பேச்சுக்களின் பெறுபேருக ஓர் இணக்கநிலைக்கான வாய்ப்பு இப்போது அதிகரித்திருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தகவல் கூறுகின்றன.

இணக்க நிலைக்கான வாய்ப்புநெருங்கியதைத் தொடர்ந்தே இந்தியத் தூதுவர் புதுடில்லிக்குத் திடீரென அழைக்கப்பட்டார் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு. டிக்ஸிற் நல்ல முடிவோடு இன்று கொழும்பு திரும்புவார் எனச் சில வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்த போதிலும்,

அவர் நாளையே இங்கு வருவார் என்றும் புதன்

(6ஆம் பக்கம் பார்க்க)

### வடபகுதி சென்ற சிப்பாய்

கொழும்பு, ஜூன். 27

வடபகுதி சென்ற சிப்பாய்!

இத்தலைப்பிலான சிங்கள நாவல் கொழும்பில் வெளியாகியுள்ளது.

சிங்களத்தில் நாவலின் பெயர் 'உத்துரட்ட கிய சோல்தாதுவ' என்பது.

பிரபல எழுத்தாளர் நிஹால் பி.ஜெயதுங்கா இந்த நாவலை எழுதியிருக்கிருர்.

தமிழ்ச் சகோதரர்கள் அடைந்த துன்பங்களை சிங்கள வாசகர்களுக்கு எடுத்துரைத்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இந்த நாவல் அமைந்துள்ளது. (ஒ-எ)

### குடாநாடு முழுவதும் மின்சாரத் தடை!

யாழ்ப்பாணம், ஜூன்27

நேற்று மாலையில் இருந்து யாழ்குடா நாடு எங்கும் மின்சார விநியோகம் முற்ருகத் தடைப்பட்டிருந்தது.

அனுராதபுரத்திற்கும் ஹபரணைக்கும் இடையில் ஏற்பட்ட மின்சாரக் கோளாறே இதற்குக் காரணம் என அறியப்படுகிறது.

இந்த மின்சாரக் கோளாறு வன்செயல் நடவடிக்கையால் ஏற்பட்டதா என்பது பற்றிய சரியான, ஊர்ஜிதமான செய்திகள் ஏதும் கிடைக்கவில்லை.

இதனிடையில், நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கும், அதனை அண்டிய பகுதிகளுக்கும் சுன்ஞகத்தில் இருந்து ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் விநியோகிக்கப்பட்டது. (ஒ-5)

## பேராசிரியர் புல்ஜின்ஸ் நேற்று கடத்தப்பட்டார்

கொழும்பு ஜூன் 27

பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸ் நேற்று மாலை இனந் தெரியாதவர்களினுல் கடத்தப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

கொழும்பில் கருத்தரங்கொன்றில் கலந்துகொள்ளப் புறப்பட்டுச் சென்ற சமயம் இனந் தெரியாதவர்கள் அவரை அவரின் காருடன் கடத்திச் சென்றனர் என்று அறிவிக்கப்பட்டது.

அவரின் கார் டிக்மன்ஸ் வீதியால் வந்தசமயம் கறுப்புக் காற்சட்டை அணிந்த மூன்றுபேரால் மறிக்கப்பட்டது.

மூன்றுபேரும் பிஸ்டல்கள் வைத்திருந்தனர். காரின் பின்கதவைத்திறந்து பின்ஆசனத்தில் பலவந்தமாக ஏறிக்கொண்டனர். அதன்பின்னர் காரைஓட்டும்படி டிரைவரைப்பணித்தனர். கார் ஹவ்லக்வீதிச் சந்தியை அடைந்தது. அதன் பின்னர் விக்டோரியா அவனியு சந்தியில் கார் நிறுத்தப்பட்டது.

காரினுள்இருந்த திரு. புல்ஜின்ஸின் செயலாளரையும் சாரதியையும் வெளியே தள்ளிவிட்ட தீவிரவாதிகள் திரு. புல்ஜின்ஸுடன் காரை ஓட்டிக்கொண்டு புல்லர்ஸ் வீதிப் பக்கம் சென்றனர்.

இவர் கடத்தப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டதும் கொழும்பு மாநகரம் முழுவதும் ஆயுதபடையினர் தடைபோட்டுத் தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### லொறி விபத்து 16 பேர் பலி!

சென்னை ஜூன் 27

தர்மபுரி மாவட்டத்தில் லொறி விபத்து ஒன்றில் 16 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இவர்களில் 15 பேர் பெண்கள்.

லொறி கட்டுப்பாட்டை இழந்து ஊத்தங்கரை என்னுமிடத்தில் ஏரி ஒன்றில் மூழ்கியது. (ஒ-எ)

## யாழ்நகரில் மீண்டும் சோதனை தீவிரம்

குருநகர், ஜூன். 27

யாழ்நகரப்பகுதிகளில் இந்திய அமைதிப்படையினரின் வீதிச்சோதனைகள் மீண்டும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை தட்டாதெருச்சந்தி, சத்திரத்துச் சந்தி பகுதிகளில் வீதிச்சோதனைகள் இடம்பெற்றன.

சோதனை நடவடிக்கைகளில் பெண் பொலீஸாரும் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் பாஷையூர், திருநெல்வேலி, நாச்சிமார் கோவிலடி, பெருமாள் கோவிலடி, ஸ்ரான்லி வீதி பகுதிகளில் அமைதிப்படையினர் கடும் சோதனைகளை நடத்தினர். (ஒ-51)

### சுபநேரம்

27 - 06 - 1988
ஆனி - 13
திங்கட்கிழமை

சுபநேரம்:
11.55 முதல் 01.25வரை

ராகுகாலம்:
07.25 முதல் 08.55வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பிரதோஷ விரதம்

## தாதிகள் பயிற்சிப் பாடசாலை மூடப்படும் அபாய நிலை!

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சிப் பாடசாலை மூடப்படவேண்டிய நிலையில் இருப்பதாக அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு போதியளவு போதனு ஆசிரியர்களும் உப - அதிபரும் இல்லாதிருப்பதே இதற்குக் காரணமாகும்.

இது தொடர்பாக யாழ் சுகாதார திணைக்களம் கொழும்பில் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

வட பகுதியிலேயே யாழ்ப்பாணத்தில் மட்டும் தான் ஒரேயொரு தாதியர் பயிற்சிப் பாடசாலை இயங்கிவருகிறது.

இங்கு ஆறு போதனு சிரியர்களும் ஒரு மருத்துவப் போதனுசிரியரும் ஓர் அதிபர் ஓர் உப அதிபர் ஆகியோரும் கடமையாற்ற வேண்டியது கட்டாய விதியாகும்.

எனினும் தற்பொழுது மூன்று போதனுசிரியர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர். அவர்களில் ஒருவர் இளைப்பாறும் தறுவாயில் உள்ளார். மற்ருெருவர் புலமைப் பரிசில் பெற்று வெளிநாடு செல்ல உள்ளார்.

உப-அதிபர் இல்லாத நிலையில் அதிபர் மட்டுமே தற்பொழுது கடமையாற்றி வருகி

(6ஆம் பக்கம் பார்க்க)

செஞ்சிலுவைச் சங்க ஏற்பாட்டில்

## பருத்தித்துறை வைத்தியசாலைக்கு 4 தொண்டர் டாக்டர்கள்

யாழ்ப்பாணம் ஜூன் 27

சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அனுசரணையுடன் யாழ் செஞ்சிலுவைச் சங்கம் மேலும் நான்கு தொண்டர் டாக்டர்களைச் சேவைக்கு அமர்த்த உள்ளது.

இந்தத் தொண்டர் டாக்டர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்ற உள்ளனர்.

இந்தத் தகவலை யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் ஆர். தெய்வேந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

வடபகுதியில் நிலவும் டாக்டர்கள் பற்ருக்குறையை உத்தேசித்து யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தினர் இவ்வாருகத் தொண்டர் டாக்டர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்தனர்.

அதனடிப்படையில் வைத்தியப் பயிற்சியை முடித்துவிட்ட நால்வர் தற்பொழுது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேவைக்கு அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இதேமாதிரியாக பன்னிரண்டு டாக்டர்கள் ஏற்கனவேயாழ்போதனு வைத்தியசாலையில் கடமையாற்றுவது தெரிந்ததே. (ஒ-9)

## திருமலையில் அரச அலுவலகங்களில் கூடுதல் சிங்கள அதிகாரிகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 27

திருகோணமலை அரச அலுவலகங்களில் மீண்டும் சிங்கள அதிகாரிகள் அதிக எண்ணிக்கையில் கடமைக்கு அமர்த்தப்படுகிருர்கள்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் திருகோணமலை மாவட்ட அரச அலுவலகங்களில் இருந்து இடமாற்றம் ஆகிச்சென்ற பல சிங்கள அதிகாரிகளே மீண்டும் அங்கு கடமை செய்வதற்கென அனுப்பப்பட்டுள்ளனர்.

இதேவேளை தற்பொழுது திருகோணமலையில் கடமைபுரிந்துவரும் தமிழ் அதிகாரிகளுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 400 கோவில்கள் வடக்கு, கிழக்கில் சேதம்

இராணுவ நடவடிக்கைகள், மற்றும் வன்செயல்கள் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஐநூறுக்கும் மேற்பட்ட மத வழிபாட்டுஸ்தலங்கள் சேதமடைந்தன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 400 மத வழிபாட்டுத் தலங்கள் இந்துக் கோவில்கள் என்று புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சுச் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

37 பௌத்த மத வழிபாட்டுத் தலங்களும் சேதமடைந்தன என்று பௌத்த விவகாரத் திணைக்களம் தெரிவித்தது. (ஒ-எ)

### வீடு இடிந்து விழுந்ததில் 13 பேர் மரணம்

லக்னோ ஜூன் 27

வீடு இடிந்து விழுந்ததில் 13 பேர் உயிரிழந்தனர். உத்தரப்பிரதேச மாநிலத்தில் இச்சம்பவம் சனி இரவு இடம்பெற்றது

உயிரிழந்தவர்களில் ஆறு பேர் குழந்தைகள்; 7 பேர் பெண்கள். (ஒ-எ)

### முச்சந்தி முரளி



சிப்பாய்மார் இஞ்சை என்ன செய்தவை என்டதை நாவல் சரியாகச் சொல்லியிருக்குமாணுல் சரிதான் !

வடக்கு கிழக்கில்

## கொலை, கொள்ளைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குக!

### ராஜீவ் - ஜே. ஆருக்கு தமிழ் ஊழியர் மகஜர்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கொலை கொள்ளை பெண்களை மானபங்கப் படுத்துதல் தீ வைப்பு ஆகிய சம்பவங்கள் நாளாந்தம் நிகழ்கின்றன.

இவற்றை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானம் நிலவ உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு கோரும் மகஜர் ஒன்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அரசாங்கக் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த தமிழ் ஊழியர்களே இந்த மகஜரை அனுப்பிவைத்துள்ளனர்.

பிரஸ்தாப மகஜரில் ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் கையொப்பம் இட்டுள்ளனர். (ஒ-150)

## காங்கேசன்துறை புனர்வாழ்வு நிலையத்திலும் ஜி. சீ. ஈ. விசேட பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 27

காங்கேசன்துறை புனர்வாழ்வு நிலையத்தில் விசேட ஜி.சி.ஈ.பரீட்சை நடைபெற ஏற்பாடாகி உள்ளது. கடந்த டிசம்பர் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களின் வசதிக்காக புனர்வாழ்வு நிலையத்திலும் பரீட்சை நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது

புனர்வாழ்வு முகாமில் உள்ள மாணவர்களின் பெற்ருேர்கள் அல்லது பாதுகாவலர்கள் அல்லது பாடசாலை அதிபர்கள் பரீட்சைக்குரிய பிரவேசப் பத்திரங்களை நாளை மறுதினம் புதன்கிழமைக்கு முன்பதாகப் புனர்வாழ்வு நிலையத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

இது சம்பந்தமாக இந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வாழ்வகம் திறப்புவிழா

யாழ்ப்பாணம் ஜூன் 27

தெல்லிப்பளையில் துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அருகில்அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9-00 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வைபவ ரீதியாக இவ் வாழ்வகத்தைத் திறந்துவைப்பார் (ஒ-5)

### திருமணப் பதிவு அழைப்பு

இளவாலை மூள்ளானை 'திருப்பதி' வாழ்
திரு. A. கனகசபாபதி தம்பதிகளின்
புதல்வன் திருநிறை செல்வன்

**விஜயநாதன் [விஜயன்] (Draughtsman)**
அவர்களுக்கும்

இணுவில், கே. கே. எஸ். வீதி வாழ்
திரு. வே. கதிரவேலு தம்பதிகளின்
புதல்வி திருநிறை செல்வி

**பகிரதி (ரதி)**
அவர்களுக்கும்

விபவ ஆனி 15ஆம் நாள் திங்கட்கிழமை [27 - 06 - 1988] காலை 11-00 மணிக்கும் 12-33 மணிக்கும் இடையில் வரும் சுபவேளையில்,

மணமகள் இல்லத்தில் திருமணப்பதிவு நடைபெறும்.

உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இருவீட்டுப் பெற்ருேரும் அழைக்கிருர்கள்.

(4570)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சகல விதமான T. V றேடியோ, பூஸ்டர் அன்ரனு வயர் சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், மின் விசிறிகள், சைனு மின் அடுப்புகள், T. V ஸ்ராண்ட் றைஸ் குக்கர் மற்றும் எலக்றிக் வயறிங் பொருட்கள், பெற நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road, Jaffna (C5482)

---

C 90, C 50 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. M. M. A. கரீம், 37(98) ஜின்னு ரோட், சோனக தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (4724)

---

ஆங்கில தட்டச்சு Brother Champion இரண்டும், மருந்து அடிக்கும் ஸ்பிறெயர் விற்பனைக்கு உண்டுஉடன்தொடர்பு கொள்ளவும். Mrs. நாகேஸ்வரி பாலசுப்பிரமணியம் 105, கனகபுரம் கிளிநொச்சி. (4725)

---

றலி சைக்கிள்களும், இம்பிரியல் தட்டெழுத்து இயந்திரமும் (சிறியது) விற்பனைக்கு உண்டு 11, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (4555)

---

அப்பளம் செய்வதற்கு தேவைப்படும் உழுத்தம் மா மற்றும் அரைத்த உப்பு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி ட்றூபூட் கிறைன் டேஸ் 41 கந்தப்பசேகர் லேன், ஹரன் தியேட்டர் அருகாமையில் யாழ்ப்பாணம். (4691)

### வெளியீடு– விற்பனை

நயினை நாகபூஷணி ஆலய வரலாறும் அருட்பா மாலையும் கவிஞர் நயினை நா. க. சண்முகநாதபிள்ளை BSc. விலை ரூபா 20/- தொலைபேசி 23631 வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (4718)

### வீடு விற்பனைக்கு

கிளிநொச்சி அக்கராயன் குளம், ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் மூன்று ஏக்கர் வீட்டுக் காணியுடன் மூன்று ஏக்கர் வயல் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. 4 அறைகள் ஹோல், குசினி, மலசலகூடம், 2 கிணறுகள் அத்துடன் சகல பிரயோசனங்களும் அடங்கியது. இ. சங்கரலிங்கம் 490, அக்கராயன்குளம். (4552)

### காணி விற்பனைக்கு

சங்கத்தானை புகையிரத நிலையத்துக்கருகாமையில் ரோட்டோரமாக 4 நாலு பரப்பு நல்ல தண்ணீர்க் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்ட தொழிற்சாலை அமைக்க வசதியானது. தொடர்பு: த. வேலாயுதம், சட்டத்தரணி ஸ்ரேசன் ரோட், சாவகச்சேரி. (4696)

---

தேக்கு அலுமாரிகள், கட்டில்மெத்தைகள் விட்டுப் பாவனை ShowCase (தேக்கு), சாப்பாட்டு மேசைகள்கதிரைகள் காரியாலயமேசைகள், கடை ShowCase(பெரிது), கண்ணாடிமேசைகள்,இரும்புத் தளபாடங்கள், கண்ணாடிப் பொருட்கள் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு.M. தியாகராஜன் 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சென் பற்றிக் சந்திக்கு அருகில்) (4549)

## தேவை

யாழ் நகரில் பிரபல்யமாக இயங்கும் நிறுவனம் கொழும்பு, வவுனியா, வடமராட்சி ஆகிய இடங்களில் நிறுவவுள்ள கிளைகளுக்கு முகாமையாளர், லிகிதர் [பெண்கள்] வெளிக்கள பணியாளர் [ஆண்கள்] தேவை. கல்வித் தகைமை G.C.E. O/L 5-7-88 முன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: C/o 243 உதயன், யாழ்ப்பாணம். (4716)

---

யாழ் நகரில் உள்ள மின்சாரப் பொருள்கள் விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர்கள் தேவை, முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. C/o 250, உதயன், யாழ்ப்பாணம். [4731]

---

வைத்திய நிலைய உதவியாளர் இருவர்[ஆண்] தேவை வயது 18—20 வரை. படித்தவர்கள் விரும்பத்தக்கது. 30-6-88 அன்று நேரில் வரவும். ராஜ் வைத்திய நிலையம், லீனஸ் கட்டிட மேல்மாடி, சென். பற்றிக்ஸ் வீதி. யாழ்ப்பாணம். (C-5540)

---

யாழ்ப்பாணத்தில் அல்லது அண்மையில் கோழிப்பண்ணை குத்தகைக்கு அல்லது கூட்டாக நடத்த இடவசதி உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் C/o 169 உதயன் யாழ்ப்பாணம். (4554)

---

கைத்தொழில் நிலையம் ஒன்றுக்கு பெண் பிள்ளைகள் தேவை. தங்கி இருந்து வேலைசெய்யக் கூடியவர்களும் விரும்பத்தக்கது மங்களபதி, பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி, சங்கிலியன் வீதி, நல்லூர். (4556)

### பெண்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பிறேசியர் (Braziers) வெட்டுவதற்கும், தைப்பதற்கும் உதவியாளராகப் பணிபுரிவதற்கும் மற்றும் காசாளர் / லிகிதர் (கணக்கியல் அறிவுடையவர்கள் A/L படித்தவர்கள்) போன்ற பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (பெண்கள் தேவை) முடிவுத் திகதி 05-07-1988 ல், தொடர்பு: C/o 246, உதயன் யாழ்ப்பாணம். (4714)

### பிறந்ததின வாழ்த்து

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை மேற்பார்வையாளர் திருமதி எஸ். நடராஜா தனது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகின்றார். திருமதி நடராஜாவை உற்றார், உறவினர்களுடன் வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் உதயன், சஞ்சீவி விளம்பரப் பணிமனை திரு. கிருபாகர சூரியனும் வாழ்த்துகின்றார்கள். [4733]

## கலர்படம்

உங்கள் கலர்ப்படச் சுருள்களை மைக்கிரோ கொம்பியூட்டர் மூலம் கொழும்பு - சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரதி செய்ய விரும்புகின்றீர்களா? Processing இலவசம் பிரதி P. C 4/50 Only Processing 25/- தரமாகவும் விரைவாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள கொழும்பு ஸ்ரூடியோ யாழ்ப்பாணம். (C/4910)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road Jaffna (Samy & Co Shabra அருகாமையில். (C5300)

## கல்வி

City And Guilds of London Institute Quantity Surveying 1989, வகுப்புகள் 1-7-1988 தொடக்கம் அற்லஸ் இன்ஸ்ரிரியூட் திருநெல்வேலியில் நடைபெறவுள்ளன. வகுப்புகள் யாவும் காலை 6. 30முதல் 8. 30 வரை நடைபெறும். 30-6-88ம் திகதிச்கு முன்பு அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளவும். (4663)

---

ஆண்டு 5, 6 புலமைப் பரிசிலுக்கான முன்னோடிப் பரீட்சை 9-07-88 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் 5-7-88க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மொடேண் எடியுகேஷன் சென்ரர், கரவெட்டி. (4713)

### பதவி விலகல்

சண்டிலிப்பாய் பிரசைகள் குழுவில் உத்தியோகம் வகிக்கும் டாக்டர் த. கோபாலசிங்கம், செ, நித்தியானந்தம், க. செல்லையா ஆகிய நாங்கள் எங்கள் பதவியில் இருந்து விலகிக் கொள்கிறோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம். [4727]

### வாடகைக்கு

யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: க. முத்துக்குமாரசாமி, செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம். (C 5507)

### வீட்டுப்பணிப் பெண் தேவை

நன்ருக வேலை செய்யக்கூடிய 15ற்கும் 30 வயதுக்கு மிடைப்பட்ட பணிப்பெண் தேவை. தங்குமிடவசதியுண்டு. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் வரவும்: செ.நடனசபாபதி இல: 32, மருதடி வீதி, யாழ்ப்பாணம். (4698)

### மடுத்திருப்பதி யாத்திரை

காவலூர் புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ் [சுருவில் வீதி], நிர்வாகிகளால் தனிப்பட்டவர்களுக்கான மடு யாத்திரை ஆனி மாதம் 29ம் திகதி பிரயாணத்துக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. ஆகவே விரும்பியவர்கள் ஒருகிழமைக்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்: நிர்வாகி கரம்பொன் காவலூர். (4699)

### திருமண சேவை

எம்மிடம்டாக்டர்கள் என்ஜினியர்கள், பட்டதாரிகள், தொழில்நுட்பதாரிகள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள் வெளிநாட்டில் தொழில் புரிவோர், சொந்த தொழில் செய்பவர்கள்(இருபாலார்) குறிப்புகளும் உண்டு.உங்கள் தகைமைக்கேற்ற மணமகன் மணமகளை கிறிஸ்தவர்களும் தேர்ந்தெடுக்க அலையாது நீங்கள் நாடவேண்டியது ''மாங்கல்யா'' 8 பருத்தித் துறை வீதி, ஆனைப்பந்தி. (4708)

## விற்பனைக்கு

''Usha'' Refrigerator in Excillent Condition for Immediate Sale Contaact:- Uni Service Engineers 19; Aseerwatham Lane, Jaffna. (4737A)

---

Three Compartment Juice Maker for Immediate SaleThreeTypes of Cool Drinks can be Made Suitable for Cool Bars And Snack Bar Contact-: Uni Services Engineers 19; Aseerwatham Lane Jaffna. (4737B)

---

Japanese Spitz வெள்ளை நிற ஆண்நாய்க் குட்டிகள்உடன் விற்பனைக்கு உண்டு. 86, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (4550)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் ஹொட்டேல் ஜனத்துக்கு அருகாமையிலும் ஸ்ரேசன் ஒழுங்கையின் கிழக்குப் பக்கமாகவும் அமைந்த கட்டடங்கள் (கடைகள்) வாடகைக்கு கொடுக்கப்படும். C/o 245 உதயன் யாழ்ப்பாணம். (4686)

### அறிவித்தல்

வட கோவை இளைஞர் கழகம் தமது செயற்பாடுகள் யாவற்றையும் தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளது என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகிறோம். (-நிர்வாகக்குழு) (4541)

### அனைவருக்கும் இலவசம்

அன்பரே சங்கிலித் தொடர்போல்துன்பமா? நீங்கள் எல்லாம் வல்லவரெனின் ஏன் உங்களுக்கு இன்பமாக வாழ முடியவில்லை? உங்களால் முடியாது. அற்புத அன்னை வேளாங்கண்ணியை நினைத்து தியானியுங்கள். அன்னைஆனந்தமான வாழ்வை உங்களுக்கு நல்க சித்தமாய் உள்ளார். அடைக்கலம் புகுவோரை நிச்சயமாக ஆதரிப்பார் துன்பம் நீங்கி இன்பம் பெற உலகில் வேறு வழியில்லை. உங்கள் அனுபவத்தை மற்றையோருக்கும் எடுத்துச் சொல்லுங்கள். [4726]

### தவறிவிட்டது

598090092X என்னும் அடையாள அட்டையும் கைப்பையும் சாவகச்சேரி மினிவானில் 23-6-88 இல் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். நீகல் வீடியோ 32 ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை கச்சேரியடி. (4719)

---

88 ஸ்ரீ 4586 CD 200 மோட்டார் சைக்கிளின் புத்தகமும் சாரதிப் பத்திரமும் K. K. S. ரோட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்துக் கொடுப்பவர்வர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளும் முகவரி: சி. விஸ்வரத்தினம். பூணறி ஒழுங்கை கொக்குவில் மேற்கு, கொக்குவில். (4728)

---

அன்னலிங்கம் சிவனேஸ்வரலிங்கம் என்பவரது அடையாளஅட்டை 20. 6. 88 இல் பருத்தித்துறை பிரதான வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பருத்தித்துறை பழைய A. G. A கந்தோருக்கு அருகிலுள்ள [illegible] ஒப்படைக்கவும். (4[illegible])

---

வெளிவந்து விட்டது!
G.C.E. A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பயன் தரத்தக்க வகையில்

## நடைமுறை விடயங்கள்

(வர்த்தகமும் நிதியும்)
விலைரூபா: 22/50
திருத்திய இரண்டாம் பதிப்பு
தொகுப்பு: தேவராஜன் – ஜெயராமன்

★ நிறுவனங்கள் ★ வங்கிகள்
★ போக்குவரத்து ★ செய்தித் தொடர்பு
★ சந்தைப்படுத்தல் ★ சர்வதேச வர்த்தகம்
★ கம்பனி ★ கூட்டுத்தாபனம்
★ தொழில் உறவுகள்

தொடர்பான நடைமுறை விடயங்கள்

குறிப்பிட்டளவு பிரதிகள் மாத்திரமே அச்சிட்டபடியால் உங்கள் பிரதியை உடன் பெற்றுக் கொள்ளுங்கள்.

● நேரடியாக எம்மிடம் கொள்வனவு செய்வோருக்கு ரூபா 20 மட்டுமே.

வெளியீட்டோரும் விற்பனையாளர்களும்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(4756)

---

## அறிவித்தல்

**வடபிராந்திய பெற்ரோலிய முகவர்கள் சங்கப் பொதுக்கூட்டம்**

இடம்:-
111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(புதிய பிரதம தபாற் கந்தோருக்கு அருகில்)

திகதி: 29-06-1988

நேரம்: காலை 10 மணி

விடயம்: இன்றைய நிலைமையில் எரிபொருள் விநியோகம் பற்றியும் முகவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்படும்.

வடபிராந்திய பெற்ரோலிய முகவர்கள்
காரியதரிசி
(4553)

---

## நாகதுர்க்காதேவி ரவல்ஸ்

எங்கள் ஸ்தாபனம் 28-6-88 நண்பகல் 12மணிக்கு வரும் சுபவேளையில் ஆரம்பிக்கப்படும்.

வெளி நாடுகளிலிருந்து நேரடித் தொடர்புகள் மூலம் வேலைவாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படும்.

28-6-88 ஆரம்ப தினத்திலன்று ரூபாய் 3000/- முற்பணம் செலுத்தி வேலைவாய்ப்புக்களுக்கு பதிவு செய்பவர்களை அன்று பிற்பகல் 4 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படும். அதிர்ஷ்டசாலிக்கு தங்க மோதிரம் ஒன்று பரிசு வழங்கப்படும்.

### உடன் தேவை

✶ குவைத்
(சாரதி, ஆஸ்பத்திரி கிளீனர்ஸ்)
✶ சிங்கப்பூர்
(வீட்டுப்பணிப்பெண்கள்)
✶ மாலைதீவு
(மேசன், தச்சுவேலை, கூலி)

மற்றும்
● பாஸ் போர்ட் செய்தல், புதுப்பித்தல்
● விசா, பிரயாணச் சீட்டு
ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மேலும் விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்

முகவரி:
**K. S. மஹாலிங்கம்**
(பாண்டியன்)
முன்னுள் பொலிஸ்நிலைய முன்பாக கண்டி வீதி, சாவகச்சேரி.
(4755)

---

## பிரியா அன் ஏ.கே. ரவல்ஸ்

PIRIYA & A.K. TRAVELS

துரித கெதியில் குவைத் நாட்டிற்கு

**பயண ஒழுங்குகள்**

20 பேர் பண்ணை வேலையாட்கள் சம்பளம் 35 K.D (20 பேர் மட்டும்)

இலவச இருப்பிடம், சாப்பாட்டு வசதிகள் உண்டு.

பாஸ்போட்டுடனும் 6 படங்களுடனும் நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

இல 110,1/6
ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு- 13.

Registered NO: 204786 (4754)

---

ஹரன் வெண்திரையில்
கடைசி 3 தினங்கள் மட்டும்
தினசரி 10.30, 2.30

**சிரஞ்சீவி, விஜயசாந்தி**
நடித்த
**பந்தயம்**
01 – 07 – 88 முதல்
பாக்யராஜ் ராதிகா, கல்லாப்பட்டிசிங்காரம்
நடித்த
**போய்சாட்சி**
புதிய வெளியீடு (4759)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

வீரவேங்கை
சிவயோகராசா - குமாராசா
(புறப்புளர்)

தாயின் மடியில் 26. 06. 1971   தாயக மண்ணில் 27. 05 1988

மண் காத்திட மனமது கொண்டாய் இன்னுயிர்தன்னை உன்னதாய் நீத்தாய் அடுத்தவர் உன்னை வளைத்திடு முன்னர் வரலாற்று வீரனாய் வாழ்வை முடித்தாய்.

உன் செந்நீரிலே கலந்த –
தமிழ் ஈழ தாகம் –
எம் நெஞ்சங்களை நிறைக்கும்
உன் நினைவில் அது வளரும்
ஓர் நாள் -
உன் கல்லறையின் கதவுகள்
தட்டப்படும் –
விழித்துப்பார்!
கொட்டும் முரசு ஒலிக்கும்
நீ கண்ட கனவு –
பலித்திருக்கும்.

மக்கள் உன் நினைவாலயத்திற்கு மலர் தூவி வாழ்த்துவார்கள் - ஏற்றுக்கொள் அப்போது.

தென்மராட்சி – நண்பர்கள்
(4562)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. பொன்னம்பலம் - நாகராஜா (கண்மணி)**
(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம்: 25- 2- 1918   மறைவு: 28- 5- 1988

அந்தியேட்டி 27-6-1988:

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டோர்க்கும், வேறுவகையில் உதவி புரிந்தோர்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் தருபவர்:
பா. வரலக்ஷமி (வரதா)
'கண்ணவாசா'
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி
(4757)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசுவமடு வெறிச்சோடிக் கிடக்கிறது

புதுக்குடியிருப்பு, ஜூன் 27

நடைபெற்று வரும் படையினரின் தேடுதல் நடவடிக்கையினால் விசுவமடுப்பகுதியில் தொடர்ந்தும் பதற்றநிலை இருந்து வருகிறது. அப்பகுதி வெறிச்சோடிக் கிடக்கின்றது.

இக்கிராமமும் அதனை அண்டியுள்ள உடையார்கட்டு, தேவிபுரம், சுதந்திரபுரம் ஆகிய கிராமங்களும் விவசாயக் கிராமங்களாகும். அப்பகுதி மக்கள் தங்கள் விவசாய உற்பத்திப்பொருள்களை விசுவமடுச் சந்தியிலேயே சந்தைப்படுத்துவது வழக்கம்.

இப்போதுள்ள தேடுதல் நடவடிக்கையின் போது வயது வேறுபாடின்றி, வயதுவந்தவர்கள், குழந்தைகள் அனைவரும் கடுமையாகச் சோதனைக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் பிரயாணம் செய்பவர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவுக்குப் பிரயாணம் செய்பவர்களும் விசுவமடுப் பகுதியிலேயே தேநீர், சிற்றுண்டி அருந்துவதுடன் விவசாய உற்பத்திப் பொருள்களையும் கொள்வனவுசெய்வது வழக்கம்.

தற்போது விசுவமடுச் சந்தி வெறிச்சோடிக் கிடக்கிறது. வாகனங்கள் அங்கே நிறுத்தப்படுவதற்குப் பதிலாகப் பளையிலேயே நிறுத்தப்பட்டு வருகின்றன.

### இயங்குகிறது

தாளையடி, ஜூன் 27

வடமராட்சி கிழக்கில் உள்ள வெற்றிலைக்கேணி கனிஷ்ட மகா வித்தியாலயம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

சுமார் ஒரு மாதகாலமாக இப்பாடசாலை இயங்கவில்லை.

(இ-114)

## மட்டக்களப்புப்பகுதியில் கொள்ளைகள் அதிகரிப்பு

### இரவைப் பீதியுடன் கழிக்கும் மக்கள்

மட்டக்களப்பு, ஜூன் 27

மட்டக்களப்புப் பகுதியிலுள்ள கிராமங்களில் இடம்பெற்று வரும் கொள்ளைகளினால்பொது மக்கள் மத்தியில் பயமும், பீதியும் நிலவுகின்றன.

கல்லாறு, முனைத்தீவு, கொக்கட்டிச்சோலை குருமண்வெளி, மண்டூர் உட்பட பல கிராமங்களில் இதுவரை 50 க்கும் மேற்பட்ட வீடுகள் கொள்ளையர்களின் கைவரிசைக்குள்ளாகி இருக்கின்றன.

ஒரே இரவில் 2 முதல் 9 வீடுகள் வரை கொள்ளையடிக்கப்படுகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் பொது மக்கள் இரவைப் பீதியுடன் கழிக்கின்றனர். (இ-21)

அளவுக்கு மிஞ்சி உற்பத்தி

## பனங் கள் வீணாகி ஊற்றப்படுகிறது

ஊர்காவற்றுறை, ஜூன் 27

தீவுப்பகுதியில் உள்ள பனம் பொருள் உற்பத்திச் சங்கமொன்றின் கள் விற்கும் நிலையங்களிலிருந்து பெருமளவு பனங் கள் தினமும் ஊற்றப்படுவதாகத் தெரிய வருகிறது.

இச்சங்கத்தில் அங்கம் வகிக்கும் சீவல் தொழிலாளர்களின் கடுமையான உழைப்பினால் அதிகளவு கள் தினமும் சேகரிக்கப்படுகிறது.

அதில் தினமும் விற்பனையாகும் கள்ளைவிட மிகுதி போத்தலில் அடைத்து பிற இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. பனஞ் சாரயமும் வடிக்கப்படுகிறது.

அப்படி இருந்தும் கள் விரயமாவதைத் தடுக்க முடியாது இருக்கிறதாம் (இ-76)

## அறிவித்தல்

முருகேசு
சட்டத்தரணிகளும் நொத்தாரிசுகளும்
கொழும்பு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில்

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் பிரிவு 756 (2) இன் கீழ் மேன் முறையீட்டிற்கான அனுமதிக்காக செய்யப்படும் விண்ணப்ப விடயத்தில்

ஐக்கிய அரபுக்குடியரசு, டுபாய் இனைச்சேர்ந்ததும், கொழும்பு - 1 லோட்டஸ் வீதி, இலக்கம் 64 இல் ஓர் கிளையையும் வியாபார ஸ்தலத்தையும் கொண்டதுமான யூனியன் பாங்க் ஒவ் த மிடில் ஈஸ்ட் லிமிட்டட்

மேன்முறையீட்டு நீதிமன்ற மேன் முறையீட்டு அனுமதிக்கான விண்ணப்ப இலக்கம்: 95/86

கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம்: 33010/5

**வழக்காளி**

எதிர்

1. இலக்கம் 36, டீன்ஸ்டன் இடம் கொழும்பு-3 எனும் முகவரியைக் கொண்ட பனோ லங்கா லிமிட்டட்
2. இலக்கம் 12A, கிறகறிஸ் வீதி, கொழும்பு – 7 எனும் முகவரியையும் இலக்கம் 8234 கிறசன்ட் பீச் ரோட், பீஜன் மிச்சிகன் 48755 ஐக்கிய அமெரிக்கா, இனையும் சேர்ந்த ஷரி ஈஜன் ஷமர்சன்.
3. இலக்கம் 10 கின்ரொஸ் அவனியூ கொழும்பு-4 எனும் முகவரியைக் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசந்திரன்.
4. இலக்கம் 55 உருத்திரா மாவத்தை, கொழும்பு-6 எனும் முகவரியைக்கொண்ட தம்பிப்பிள்ளை நடேஸ்வரன்.
5. இலக்கம் 99, சென்ற் பெனடிக்ஸ் மாவத்தை, கொழும்பு - 13 எனும் முகவரியைச் சேர்ந்த சுப்பையா குமாரசாமி.
6. இலக்கம் 26 அரத்துசா ஒழுங்கை, கொழும்பு-6 எனும் முகவரியையும் இலக்கம் 38 காலி வீதி, கொழும்பு-6 இனையும் சேர்ந்த ஜெருல்ட் கோமிஸ் சமரநாயக்கா.

**எதிராளிகள்**

ஐக்கிய அரபுக் குடியரசு டுபாய் இனைச்சேர்ந்ததும் கொழும்பு - 1 லோட்டஸ் வீதி, இலக்கம் 64 இல் ஓர் கிளையையும் வியாபார ஸ்தலத்தையும் கொண்டதுமான யூனியன் பாங்க் ஒப் த மிடில் ஈஸ்ட் லிமிட்டட்.

**வழக்காளி - மனுதார்**

எதிர்

1. இலக்கம் 36, டீன்ஸ்டன் இடம் கொழும்பு – 3 எனும் முகவரியைக்கொண்ட பனோ லங்கா லிமிட்டெட்.
2. இலக்கம் 10 கின்ரொஸ் அவனியூ கொழும்பு-4 எனும் முகவரியைக்கொண்ட கணபதிப்பிள்ளை பாலசந்திரன்.
3. இலக்கம் 55, உருத்திரா மாவத்தை, கொழும்பு-6 எனும் முகவரியைக்கொண்ட தம்பிப்பிள்ளை நடேஸ்வரன்.
4. இலக்கம் 99, சென்ற் பெனடிக்ஸ் மாவத்தை, கொழும்பு – 13 எனும் முகவரியைச்சேர்ந்த சுப்பையா குமாரசாமி
5. இலக்கம் 26, அரத்துசா ஒழுங்கை, கொழும்பு6 எனும் முகவரியையும் இலக்கம் 38, காலி வீதி, கொழும்பு 6 இனையும் சேர்ந்த ஜெருல்ட் கோமிஸ் சமரநாயக்கா

எதிராளிகள் – பிரதிவாதிகள்

**மேற்குறிப்பிட்ட 1 ஆம் எதிராளி - பிரதிவாதிக்கு**

வழக்காளி – மனுதாரர் – வங்கியின் விண்ணப்பம் அத்துடன் அணைக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் வழக்காளி – மனுதாரர் – வங்கியின் தத்துவக்காரரின் சத்தியக்கடதாசி ஆகியவற்றை வாசித்த பின்னரும் சட்டத்தரணிகளும் பிரசித்த நொத்தரிசுகளுமான திருவாளர்கள் முருகேசு இன் அனுசரணையுடன் ஆஜராகிய சட்டத்தரணிகள் திருவாளர்கள் எஸ். சிவராசா, ஏ. ஆர். சுரேந்திரன் அவர்கள் கேட்டுக் கொண்டதன்படியும் இவ் விண்ணப்பம் பற்றிய அறிவித்தல் உங்களிற்கு கொடுக்கப்பட்டும் சேர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் இந் நீதிமன்றம் கட்டளையிடுகின்றது.

ஆகவே இவ்விண்ணப்பம் கொழும்பு ஹல்ஸ்டப்பிலுள்ள இந்நீதிமன்றத்தினால் 1988 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு அல்லது இந்நீதிமன்றத்திற்கு வசதியான இன்னோர் நாளில் விசாரிக்கப்படும் எனும் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். அத்துடன் இவ்விண்ணப்பம் ஏன் ஏற்றுக்கொள்ளப்படக் கூடாது என்பதற்கான ஏதேனும் காரணம் இருப்பின் அதனையும் தெரிவிக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்.

இவ் விண்ணப்பத்தின் பிரதிகள் அத்துடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள், வழக்காளி – மனுதாரர் – வங்கியின் தத்துவக்காரரின் சத்தியக்கடதாசி என்பவற்றின் பிரதிகளை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதிவகத்தில் அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது கொழும்பு -1, யோர்க்வீதி, கேமாஸ் கட்டடம் 3 ஆம் மாடியில் உள்ள, திருவாளர்கள் முருகேசு' (வழக்காளி - மனுதாரர் - வங்கியின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணிகள்) அவர்களிடம் இருந்து கட்டணம் இன்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

நீதிமன்றக்கட்டளைப்படி
பதிவாளர்

1988 ஆம் ஆண்டு யூன் மாதம் 8 ஆம் திகதி.

(C/5530)


## குவைத் உடனடி வேலை வாய்ப்பு

★ குவைத் அலுமினியம் பைக்டரியில் வேலை செய்வதற்கு 100 பேர் (50 K. D)
★ குவைத் ஹாபர், ஆஸ்பத்திரி ஆகியவற்றில் கிளீனேர்ஸ் ஆக வேலைசெய்வதற்கு 100 பேர் (40 K. D)
★ **விட்டுப் பணிப்பெண்கள்** (சிங்கப்பூர், குவைத்)
★ வயது 23 - 40 வரை

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**சமட்ரக் ரவல்ஸ் லிமிட்டெட்**
262, பிரதான வீதி.
யாழ்ப்பாணம்.

(C/5529)


## தொழினுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம்

### 1988/89ம் கழகவாண்டிற்கான பிரவேசம்

யாழ். தொழினுட்பக் கல்லூரியின் பல்வேறு பயிற்சி நெறிகளுக்குமான விண்ணப்பங்கள் 1988-06-10 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் 1988-07-15ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அதிபர், தொழினுட்பக் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ். தொழினுட்பக் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

சி. இராசேந்திரா
அதிபர்.

தொழினுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,
1988-06-24.

(சி-5538)


## KUWAIT

### VACANCIES

Wanted CLEANERS for Kuwait.
MALES: Age: 20 to 40
FEMALES: Age: 30 to 40
3 Years Contract.

**GULF WINGS**
23, Aloe Avenue
Colombo - 3.

Applications in Jaffna District may be handed over to

**V. T. R. Travels**
41, 3rd Cross Street,
Jaffna.

Approval No: AL 527/6/88
(4823)


## அகதிகளை சொந்த இடங்களுக்கு அனுப்புவதில் உள்ள நெருக்கடி

காங்கேசன்துறை ஜூன் 27

தமிழ் நாட்டிலிருந்து நாடு திரும்பும் அகதிகள் விடயத்தில் தாராள மனப்பான்மை காட்டப்படுவதால் அவர்களைப் பராமரித்து சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதில் பெரிதும் வேலைப்பளுவும், நெருக்கடியும் ஏற்படுகின்றன என்று மேலதிகாரிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

கடந்த வாரம் வந்த கப்பலில் 565 அகதிகள் வந்திருந்தனர். அவர்கள் 1160 பொதிகளைக் கொண்டு வந்திருந்தனர். 75க்கு மேற்பட்ட சைக்கிள்களும் வந்திருந்தன. 8 அடி நீளமும், 2 அடி அகலமும் கொண்ட ஒரு மரப் பெட்டி நிறைய உடுபுடைவைகள் காணப்பட்டன. கிறைண்டர்கள் உட்பட மற்றும் மின்சார சாதனங்களும் கொண்டு வரப்பட்டிருந்தன.

இந்த விபரங்களை நடேஸ்வராக்கல்லூரி அகதிகள் தங்கும் முகாமில் கடமையாற்றிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நெருக்கடியின் மத்தியில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஞான சுலோசினிதேவி என்பவர் தமது 7பொதிகளை தவறவிட நேர்ந்தது.


பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி ராணியம்மா தமது பொதி ஒன்றை தவறவிட நேர்ந்தது.

முகாம் பொறுப்பாளர் இதுபற்றி ஆராய்ந்து தவறவிட்ட பார்சல்களைப் பெற்றுக் கொடுத்து உதவினர்.

அகதிகள் விடயத்தில் காட்டப்படும் தாராள மனப்பான்மையை பயன்படுத்தி வியாபார நோக்குக்கும் மோசடிக்கும் பலர் வழிவகுப்பதால் அகதிகளை பராமரிப்பதிலும், பொதிகளை ஒழுங்குபடுத்தி சொந்த இடங்களுக்கு அனுப்புவதிலும் பெரிதும் நெருக்கடி ஏற்படுவதாக நடேஸ்வராக் கல்லூரி முகாமில் கடமை புரியும் அதிகாரிகள் மேலதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

(இ-58)


## வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி



**Computer Programming in Basic Language**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்:**
சனி, ஞாயிறு வகுப்புகள் 2-7-88 பயிற்சி காலம்: 2 மாதம்
திங்கள், புதன், வெள்ளி வகுப்பு : 1-7-88 பயிற்சி காலம்: 40 நாள்
கட்டணம் 750/- (இரு பிரிவுகளாக செலுத்தலாம்)
O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி I. B. M (Compatable) கம்பியூட்டரில் வழங்கப்படும் பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

**Diploma in Computer Programming**
Computer Programming and Data Processing in Basic and Cobal Language
பயிற்சிக் காலம்: 6 மாதம்

Lecturers: S. S. UTHTHAMAN
R. S. SUBAJI A. I. D. P. M
(Programmer University Jaffna.)

● குறிக்கப்பட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்.

**விண்ணப்ப முடிவு நாள்: 30-06-88**

**Unikco Computer Centre**
No: 5 மின்சார நிலைய வீதி 2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)

[C-5515]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

மூளாய் மூத்த விநாயகர் (சித்திவிநாயகர்) கோவில் பரம்பரைத் தர்ம கர்த்தாவும் முகாமையாளருமான கந்தையா குமாரசாமி ஆகிய நான் இத்தால் அறிவிப்பது யாதெனில் மேற்படி கோவில் சம்பந்தமாக இயக்குனர் சபை ஒன்றை உருவாக்குவதற்கு எவருக்கும் உரிமை இல்லை என்பதையும், எனது தலைமையில் மூளாய் சித்திவிநாயகர் முத்துக்குமார சுவாமி ஆலய தேர்த் திருப்பணிச் சபை உருவாகி கோவிலுக்குரிய தேர், தேர்முட்டி, இருப்பிடம் என்பவற்றுக்குரிய சகல வேலைகளையும் வரைபடங்கள் தயாரித்து செய்துவருவதாலும் எத்திருப்பணிக்கும் வேறு ஒரு சபையை உருவாக்க வேண்டிய அவசியமே இல்லை என்றும் அறியத்தருகின்றேன். அன்பர்கள் தேர்த் திருப்பணிக்கு உதவும் நிதியை முன்போல தேர்த் திருப்பணிச் சபையிடம் மாத்திரம் கொடுக்கவும். அத்துடன் முத்துக்குமார சுவாமி கோவிலுக்கு மாத்திரம் ஒரு சபையை உருவாக்குவதற்கு நாம் ஆட்சேபிக்கவில்லை. (4540)

## நித்தியின் நினைவஞ்சலி



திருமதி. நல்லைநாதன் நித்தியலக்ஷ்மி
B. A (cey) Dip in Ed. M- A- Q

அருமை மகளாக அன்புச் சகோதரியாக, அன்பு அகலாத ஆருயிர் மனைவியாக அன்புக்கு அர்த்தம் சொன்ன அருள் நங்கை.

அத்தனடி நித்தம் மனத்திலிருத்தி அல்லும் பகலும் அவனருளால் அவன் தாழ் வணங்கி அறம் பல ஆற்ற அஞ்செழுத்தும் நெஞ்சழுத்திய ஆரணங்கு.

அபார ஆற்றலினாலும்; அறிவுத்தெளிவினாலும், ஆயும் புலமையினாலும் அள்ளு தொனியினாலும் ஆசிரிய சேவையிலே அழியா அடையாளங்களை ஆழமாகப் பதித்த அன்பு வழியும் ஆசிரியை.

அடிதொழுத அனைவரையும் அழவைத்து, ஆளான அடியவர்களின் அல்லல் களை அறுத்து ஆண்டருளும் அம்பலத்தானடியை அடைந்த அன்புத்தீபத்தை, அறிவுச்சுடரை ஆண்டாண்டு தோறும் அஞ்சலிப்போம்.

கணவன்
(4818) சகோதர சகோதரிகள்

இன்று

## 31 ஆவது நினைவு நாள்



அமரர் கந்தையா செல்வநாயகம்
அவர்கள்

மலர்வு: 1909-08-23
உதிர்வு: 1988-0[illegible]-28

(முன்னாள் பட்டினசபைத் தலைவர் [illegible]) (4[illegible]7)

# சிலாவத்தையில் 100 வீடுகளைக் கட்டுகிறது
## மனித முன்னேற்ற நடுநிலையம்

குருநகர் ஜூன் 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிலாவத்தை சுவாமி தோட்டத்தில் யாழ். மறை மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தால் நூறு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொன்றும் சுமார் 15, ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப் பட்டு வருகின்றன.

இவற்றில் எழுபது வீடுகள் முடியும் தருவாயில் இருப்பதாக நடுநிலைய இயக்குநர் வண-பிதா எம். ஈ. மயஸ் அடிகளார் ''உதயன்'' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

1983 ஜூலை இனக்கலவரத்தின் போது மலையகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்த 100, குடும்பங்கள் முல்லைத்தீவு சிலாவத்தையில் ஆயருக்குச் சொந்தமான சுவாமி தோட்டத்தில் அமர்த்தப்பட்டனர்.

குடும்பம் ஒன்றுக்கு கால் ஏக்கர் காணி இருபது தென்னங்கன்றுகள் ஆரம்பத்தில் வழங்கப் பட்டிருந்தன

வண-பிதா எம் ஏ யோசராசா வண-பிதா ம பொஸ்கோ மதுரநாயகம் ஆகியோரின் முயற்சியால் கத்தோலிக்கத் திருச்சபை நிதியில் இருந்து மேற்படி வீடுகளை அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. (இ-51)

## சென்பற்றிக்சில் இல்ல விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 27

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

ஆண்டனை இயோருப் பிள்ளை விளையாட்டரங்கில் பிற்பகல் 2.15 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகும்.

யாழ் கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கே. சோமசுந்தரம் பிரதம அதிதியாகக்கலந்துகொள்வார்

திருமதி சோமசுந்தரம் பரிசுகளை வழங்குவார். (க)


## புதிய உயர் கல்லூரி

A/L 89 கலை வர்த்தகம்
1 வருட வகுப்புகள் புதிய பிரிவு
ஆரம்பம்: 2-7-88 [8 மணி]
விபரங்களுக்கு:
S. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
C/5553


## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



உடுவில்
அமரர் முத்து சின்னத்துரை
உதயம்: 1904-2-29
அஸ்தமனம்: 1988-5-28

உடுவில் ஆறுமுகம் முத்து தம்பதிகளின் அருந்தவப் புதல்வனாக அவதரித்த நீங்கள் சகல சம்பத்துக்களுடனும் நிறைவாக வாழ்ந்து இறைவனடி சேர்ந்தீர்கள். உங்களுடைய நினைவு எங்கள் மனதில் என்றும் மாறாது. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது துக்கத்தில் பங்கு கொண்ட உறவினர்களுக்கும், சுற்றத்தார்க்கும், மானிப்பாய் மகளிர், இராமநாதன் கல்லூரி உப அதிபர்கள், ஆசிரியர்களுக்கும், மானிப்பாய் இந்து, தாவடி தமிழ்க்கலவன், உடுவில் மான்ஸ் கல்லூரி அதிபர்கள், உப அதிபர்கள் ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அந்தியேட்டி: 1988-6-26 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00மணி — கீரிமலை

வீட்டுக்கிருத்தியை, பிரார்த்தனை: 1988-6-27 திங்கட்கிழமை காலை 10-00 மணி.

வீட்டுக்கிருத்தியை வைபவங்களில் கலந்துகொள்ளுமாறு சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
திருமதி பாக்கியம் சின்னத்துரை
திரு. திருமதி கலியாணசுந்தரேசன்
திரு. திருமதி ப[illegible]ராசா
திரு. திருமதி நித்தியானந்தன்
திரு. திருமதி தர்ம[illegible]ன்
திரு. திருமதி புஷ்பநாதன்
'ஜெயமனை'
1 ஆம் கட்டையடி
உடுவில் மா[illegible]
உடுவில் - சுன்னாகம் (48[illegible])

கந்தரோடை

## ஸீக்கோ டிஸ்கோ சாம்பியனாகியது

சுன்னாகம் ஜூன் 27

வலிகாமம் தெற்கு உதவி அரசாங்க உடுவில் பிரிவினால் நடாத்தப் பட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் கந்தரோடை ஸீக்கோ டிஸ்கோ விளையாட்டுக் கழகம் 105 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

புன்னாலைக்கட்டுவன் பறக்கும் கழுகு விளையாட்டுக் கழகம் 93 புள்ளிகளையும் ஸ்கந்தா விளையாட்டுக்கழகம் 81 புள்ளிகளையும் பெற்று முறையே இரண்டாம், மூன்றாம் ஸ்தானங்களைக் கைப்பற்றின.

ஸீக்கோ டிஸ்கோ சார்பில் பங்குகொண்டோரில் எம். புஸ்பலதா, எஸ். அன்புக்கரசி, ரி.ராஜினி, எம். வினித்தா, எஸ். மஞ்சுளா, எம். கனகநாயகம், எஸ். ஜீவரத்தினம் ஆகியோர் பலரதும் பாராட்டினைப் பெற்றனர்.

கரப்பந்தாட்டப் போட்டியில் ஆண், பெண் இரு பிரிவிலும் பறக்கும் கழுகு விளையாட்டு கழகம் வெற்றியீட்டியது.

உதைப் பந்தாட்டம், எல்லை ஆகிய இருபோட்டிகளிலும் ஸ்கந்தா விளையாட்டு கழகத்தினர் வெற்றி பெற்றனர்.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் சுதந்திரன் விளையாட்டுக் கழகம் மிக திறமையாக விளையாடி வெற்றிவாகை சூடியது.

சகல போட்டிகளும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. (இ-27)

## இராஜரத்தின இல்லம் முதலிடம்

கோப்பாய் ஜூன் 27

தொண்டமானாறு வீரகத்தி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் இராஜரத்தினம் இல்லம் முதலிடத்தை பெற்றது. இரண்டாம் மூன்றாம் இடங்களை முறையே சுப்பையா, வீரகத்தி இல்லங்கள் பெற்றுக்கொண்டன.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கோட்டாக்கல்வி அதிகாரி செல்வி. திலகவதி பெரிய தம்பி கலந்து கொண்டார். (சி-72)

## இணுவிலில் மெய்வல்லுநர் போட்டி

மானிப்பாய் ஜூன் 27

உடுவில் வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி நாளை 28 ஆம் திகதி இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் உடுவில் வலயத்தைச்சேர்ந்த பதின்நான்கு பாடசாலைகள் பங்குபற்றுகின்றன. (சி-90)

## மெய்வல்லுனர் போட்டி

வட்டுக்கோட்டை ஜூன் 27

அராலி வள்ளியம்மை ஞானபார்த்த வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய அதிபர் திரு. ஆ. த ஜெயராசா தலைமையில் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

வட்டுக்கோட்டை தொத்தணிப் பாடசாலைகள் நிர்வாக அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (இ-161)

## இல்ல மெய்வல்லுனர் போட்டி

கொக்குவில் ஜூன் 27

யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் இன்று27ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறுகின்றன. (66க)

## சிறிமா நாடு திரும்புகிறார்

கொழும்பு ஜூன் 27

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இன்றுகொழும்பு திரும்புகிறார்.

வைத்தியசிகிச்சைக்காக அவர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் யூகோஸ்லேவியா சென்றிருந்தார்.

விமான நிலையத்தில் அவருக்கு வரவேற்பளிக்க கட்சி ஆதரவாளர் ஏற்பாடு செய்து வருகின்றனர். [இ - எ]

உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்

நாள் முகூர்த்தம்: விபவ வருஷம் ஆனித் திங்கள் 16 ஆம் நாள் (30-06-88) வியாழக்கிழமை

மணவாளக்கோலம்: மணமகன் இல்லம். காலை 6-00 — 7-00-

திருமாங்கல்யம் தரித்தல்: மணமகள் இல்லம். பகல் 9-00 12-00 மணி வரை

| மணமகன் | மணமகள் |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| சண்முகராஜா | நந்தினி |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் நிலைகொண்டு திருமாங்கல்யதாரணம் இனிது நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

திருமதி வே.த.செல்லையா குடும்பத்தினர்
''ராஜகிரி''
புளியங்கூடல்,
ஊர்காவற்துறை

திரு. P.பொன்னுச்சாமியும் (விளையாட்டு அதிகாரி)
துணைவியாரும்
புளியங்கூடல்
ஊர்காவற்துறை
(4752)


# டேட்டாசெட்
# (DATASET)

உருக்குத் தளபாடங்கள் [Steel Furniture]

எமது நிறுவனத்தின் உள்நாட்டுத் தயாரிப்பு
பல வருட அனுபவமும் செயற்திறனும்
சேர்ந்து உருவாக்கப்பட்டவை
மிக உயர்ந்த தரமும் அழகும் நிறைந்தவை

உங்களுக்கு — உங்கள் அலுவலகத்திற்கு —
உங்கள் வீட்டுப்பாவனைக்கு ஏற்ற அனைத்து
உருக்குத் தளபாடங்கள்

★ வாட்ரோப்ஸ் (Wardrobes) ★ மேசைகள்
★ கபினேட் (Filing Cabinet) ★ அலுமாரிகள்
★ காசுப்பெட்டிகள் (Cash Box)

மற்றும்
★ தங்கள் விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் தயாரித்து வழங்கப்படும்.

எமது காட்சி அறைக்கு இன்றே விஜயம் செய்து பார்வையிடலாம்

தரமானதும் விலை மதிப்பும் உள்ள உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு நல்குவீர்!

# ஒவிஸ் இகுயிப்மென்ற் லிமிட்டெட்
# OFFICE EQUIPMENT LTD.,

கிளை அலுவலகம்:
45, பிரப்பங்குளம் வீதி,
(Off K. K. S. ROAD)
யாழ்ப்பாணம்.
(மனோகரா சந்தியிலிருந்து 150 யார்)
(சி-5532)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய ஆக்கந் தரும்

**பொருள்:**

அரசர் விரும்புகின்றவைகளைத் தாம் விரும்பாமலிருத்தல (அரசரைச் சார்ந்திருப்பவர்க்கு) அரசரால் நிலையான ஆக்கத்தைப் பெற்றுத் தரும்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
22073
யாழ்ப்பாணம்
27-06-1988
த. பெ. இல. 23

## இளைஞருக்கு உதவும் பணியில்....

வவுனியாவைச் சேர்ந்த எண்பது தமிழ் இளைஞர்களுக்கு அவசர சிகிச்சை அவசியம் வேண்டிய வைத்திய சிகிச்சைகளைச் செய்வதற்குப் போதிய வசதிகளும், நிதி நிலையும் இல்லாததால் அவர்கள் நோயாளிகளாக இருந்து அவஸ்தைப் படுகிறார்கள். அவர்களுக்கு உதவுவதற்குப் பொது நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

இவ்வாறு வவுனியா மாவட்ட தடுத்து வைக்கப்பட்டு விடுபட்டோர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பல்வேறு உடல் நோய்களுக்கும், மனத் தாங்கல்களுக்கும் ஆளாகி இருக்கும் இந்த இளைஞர்கள் வருடக் கணக்காக அல்லது மாதக்கணக்காக ஸ்ரீலங்கா அரசின் தடுப்பு முகாம்களில் தங்கள் வாழ்நாளைக் கழித்தவர்கள்.

ஸ்ரீலங்காப் படை அதிகாரிகளின் மிருகத்தனமான சித்திரவதைகளுக்கு ஆளாகித் தமது வாழும் பருவத்தை அவமாக்க நேர்ந்தவர்கள். இனியும் தங்கள் எதிர்காலம் என்னாகுமோ என்ற ஏக்கப் பெருமூச்சுடன் வாழ்க்கையே நிச்சயமற்ற நிலையில் சீவித்துக்கொண்டிருப்பவர்கள்.

காரண காரியமின்றி, உரிய சான்று எதுவும் இல்லாத நிலையிலும், சந்தேகம் என்ற ஒரு சொல்லை உச்சரித்து, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற கூரிய கத்தியைக் காட்டிக் கைது செய்யப்பட்ட ஆயிரம் ஆயிரம் தமிழ் இளைஞர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதற்கு இந்த எண்பது இளைஞர்களும் அத்தாட்சிப் பத்திரங்கள்!

தடுப்பு முகாம்களில் மனித உரிமைகள் மீறப்படவில்லை; சித்திரவதைகள் நடைபெறவில்லை என்று வாதம் கட்டிய ஸ்ரீலங்கா அரசின் பொய்யை நிரூபிக்க இந்த எண்பது இளைஞர்களும் போதிய சான்றுவார்கள்!!

இவர்களுக்கு வைத்திய ஆலோசனை, சிகிச்சை வசதிகள் செய்து கொடுக்க செஞ்சிலுவைச் சங்கம், ரோட்டரி, லயன்ஸ் போன்ற சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களின் உள்ளூர் கிளைகள் முன்வர வேண்டும். மனித அடிப்படை உரிமைகளுக்காகப் போராடும் நிறுவனங்களின் உள்ளூர்க் கிளைகளும் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு நோய் தீர்ப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களது புனர்வாழ்வுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும். அவர்களது குடும்பங்களுக்கும் உதவ வேண்டும். தொண்டர் நிறுவனங்கள் பலவும் சேர்ந்து கூட்டுத்திட்ட அடிப்படையில் உதவலாம். இந்த எண்பது இளைஞர்கள் மட்டுமா இந்த அட்டவணையில் இருக்கப் போகிறார்கள்? ஆயிரக் கணக்கில் அல்லவா சேரப் போகிறார்கள். அவர்களது இளமையும், எதிர்கால வாழ்க்கையும் பாதிப்புறுமல் இருக்கப் பார்த்துக் கொள்வது சமூகத்தில் உள்ள எல்லோரது கடமையுமாகும்.

முதலில் வவுனியா இளைஞர்கள் எண்பது பேரின் நிலையையும் வெளி உலகுக்கு வெளிப்படுத்த வேண்டும். தனது அநியாயத்தை, அக்கிரமத்தை மறைத்து வந்த ஸ்ரீலங்கா அரசுக்குச் சவால் விடுக்கும் விதத்தில் எண்பது இளைஞர்களும் எவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டார்கள், அவர்களுக்கு ஏற்பட்ட தாக்கங்கள் எவை எவை என்பதை எல்லாம் வெளிக்கொணர்வதும் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு உதவும் பணியில் ஒரு முக்கிய அம்சம் என மறந்துவிடாமல் செயலாற்ற வேண்டும். தமிழர் சந்ததியை அழிக்க அரசு எடுத்த முயற்சிகளை அப்போது தான் உலகுக்கு ஆதார பூர்வமாக நிரூபித்துக் காட்ட முடியும்.

## "தமிழ்ப் பூங்கா" வெளியீடு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஒன்பதாம் ஆண்டு 'ஏ' பிரிவு மாணவரின் 'தமிழ்ப் பூங்கா' கையெழுத்து இதழின் இரண்டாவது மலர் அண்மையில் வெளியிடப்பட்டது.

விழாவில் கல்லூரி உப அதிபர் திரு. பொ. மகேந்திரன் ஆசியுரை வழங்கினார்.

கல்லூரிக் கல்வி அபிவிருத்தி மூலவள நிலைய பொறுப்பாசிரியர் மயிலங்கூடலூர் திரு. பி. நடராஜா மலரை வெளியிட்டு வைத்தார்.

இந்துக்கல்லூரியில் 1929ம் ஆண்டில் இருந்து பல கையெழுத்துப் பத்திரிகைகள் வெளிவந்தன. அன்றைய இதழ்களின் பத்திராதிபர்கள் இன்று தலைசிறந்த கல்விமான்களாக விளங்குகின்றனர் என்று திரு. நடராஜா சுட்டிக் காட்டினார்.

இதழாசிரியர் செல்வன் பா. இளமாறன் நன்றி சொன்னார். (இ-எ)

### இன்று

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று 27ந்திகதி பிற்பகல் அதிபர் திரு. மு. ஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும். (ஓ-எ)

இஸ்லாமிய அடிப்படையில்

# பாகிஸ்தானில் பொருளாதாரப் புரட்சி

இஸ்லாமபாத், ஜூன் 26

இஸ்லாமியக் கொள்கைகளின் அடிப்படையில் பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் அறிவித்திருக்கிறார்.

மக்களுக்கு விடுத்த

## அதிபர் ஸியா அறிவிப்பு

வானொலி உரையில் அதிபர் இத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

நாட்டின் பொருளாதாரத் துறையில் புரட்சிகர மாற்றங்கள் ஏற்படுத்தப்படும்.

வரி செலுத்தாதவர் சிறையில் அடைக்கப்படுவர்.

அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும். அவர்களின் உறவினர்களின் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படும்.

எனது ஆஸ்தி மற்றும் வருமானம் முதலியனவற்றை பகிரங்கமாக வெளியிடவுள்ளேன்.

அதை ஏனைய அரசு அதிகாரிகளும் பின்பற்ற வேண்டும்.

இப்படி அதிபர் ஸியா அறிவித்தார். (எ)

## ஐரிஷ் இராணுவம் அறிவிப்பு

டப்ளின், ஜூன் 26

விமானங்களைச் சுட்டு வீழ்த்தக் கூடிய விமான எதிர்ப்புக்களைத் தாங்கள் வைத்து இருப்பதாக ஐரிஷ் விடுதலை இராணுவம் அறிவித்திருக்கிறது. (எ)

# ஈழத் தமிழருக்கு ஆதரவாக கூட்டம் நடத்தியவர்கள் மீது வழக்கு

ஆலங்குடி ஜூன் 26

ஈழத் தமிழருக்கு ஆதரவாக அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தியவர்கள் மீது தமிழ்நாடு பொலீஸ் தேசவிரோத வழக்குப் பதிவு செய்துள்ளது.

புதுக்கோட்டைப் பொலீஸார் இவ் வழக்கைப் பதிவு செய்தனர்.

ஈழத் தமிழர் மீதான தாக்குதலைக் கண்டித்து கடந்த 12 ஆம் திகதி புதுக்கோட்டையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடந்தது. மாவட்ட தி. மு. க. செயலாளர் பெரியண்ணன் தலைமையில் ஊர்வலமும் நடைபெற்றது.

இந்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது திடீர் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

பொலீஸார் அன்று 8 பேரைக் கைது செய்தனர்.

தேசிய ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவித்ததாக எண்மர் மீது 153 (ஏ), 153 (பி), 504, 505, 506 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர் கீரை தமிழ்ச்செல்வன், நகரச் செயலாளர் செழியன், அன்பழகன், சரீப், துரைராஜ், பன்னீர் செல்வம், முத்தலிப், காளிமுத்து (ஜனதா) ஆகியவர்களே கைது செய்யப்பட்டனர். (ஓ-எ)

இந்திய

# மத்திய அமைச்சரவையில் நான்கு புதிய முகங்கள்

புதுடில்லி, ஜூன் 26

இந்திய மத்திய அமைச்சரவையில் புதிதாக நான்கு பேர் கபினட் அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் உத்தரப் பிரதேச முதலமைச்சர் பதவியில் இருந்து விலகிய திரு. வீர்பகதூர் சிங்.

தகவல் தொடர்பு அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டார்.

ஏனைய மூவர்களும் வருமாறு:

மாதவாவ் சோலங்கி, [திட்டத்துறை] சங்கரானந்த்[சட்டத்துறை] எஸ். பி. சவான் [நிதி]. (ஓஎ)

**வெளி உலகில்**

## இரண்டு பெண்களை மணந்தவரின் நிலை!

டுபாய் ஜூன் 26

இரண்டு மனைவிகளில் ஒருத்திக்கு சவுக்கடியைத் தண்டனையாக வழங்கிய கணவனுக்கு டுபாய் நீதிமன்றம் 55 டாலர் அபராதம் விதித்தது.

காலிஜ் டைம்ஸ் பத்திரிகை இச் செய்தியை வெளியிட்டது.

நீதிமன்றத்தில் கணவன் சொன்னதாவது;

ஒரு மனைவி, மற்ற மனைவியை வீட்டை விட்டுத் துரத்தப்பார்த்தாள். அதற்கு நான் இடங்கொடுக்கவில்லை. வீட்டில் அமைதி நிலவ வேண்டும்' அதற்காக ஒரு மனைவிக்கு சவுக்கடி கொடுத்தேன்.

இப்படிச்சொன்ன கணவனின் பெயரை நீதிமன்றம்வெளியிடவில்லை. (எ)

திபெத் சுயாட்சி:

## தலாய்லாமாவின் கோரிக்கையை சீனு நிராகரித்தது!

பீகிங் ஜூன் 26

திபெத்துக்கு மட்டுப் படுத்தப்பட்ட சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்ற தலாய் லாமாவின் கோரிக்கையை சீன அரசு நிராகரித்து விட்டது.

எவ்விதமான சுதந்திரமும் திபெத்துக்கு வழங்கமுடியாது என்பதில் சீன அரசு உறுதியாகவிருக்கிறது.

இப்படி பீகிங்கில் அரசுப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

சீனுவின் ஒரு பகுதியே திபெத் என்பதை தலாய் லாமா இன்னும் மறுத்து வருவதை சீனப் பேச்சாளர் சுட்டிக் காட்டினார்.

தலாய்லாமா தற்சமயம் சுவிட்சர்லாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கிறார்.

திபெத் பற்றி சீனுவுக்கு எதிரான கருத்துக்களை தலாய்லாமா வெளியிடுவதைத் தடுக்கும்படி சீன அரசு, சுவிஸ் அரசைக் கேட்டுள்ளது. (எ)

## மேலை நாடுகளின்'குப்பைக்கூடை' மேற்கு ஆபிரிக்காவா?

டோகோ, ஜூன் 26

வளர்ச்சி அடைந்த நாடுகள் மேற்கு ஆபிரிக்க நாடுகளைத் தங்கள் 'குப்பைக் கூடை'களாக பாவித்து வருகின்றன என்று குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது'

பதின் மூன்று மேற்கு ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்ட உச்சிமாநாட்டில் இக்குற்றச் சாட்டு சுமத்தப்பட்டது'

நைஜீரியாவில் நடந்த இம்மாநாட்டில் வளர்ச்சியடைந்த நாடுகள் தங்களின் கைத்தொழில் கழிவுகளை மேற்கு ஆபிரிக்க நாடுகளின் கரையோரங்களில் குவிப்பதைத் தடை செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது'

இது சம்பந்தமான சட்டவிதிகளை சம்பந்தப்பட்ட நாடுகள் தயாரிக்க வேண்டும் என்று இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது' (எ)

## நிக்கரகுவா - கொன்ரு பேச்சுவார்த்தையில் இழுபறி நிலை!

மனுகுவா, ஜூன் 26

நிக்கரகுவா அரசுடன் அமைதிப் பேச்சுக்களை நடத்த மனுகுவா செல்ல முடியாது என்று கொன்ருக் கிளர்ச்சிக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிக்க கொன்ருக் கிளர்ச்சித் தலைவர்களுடன் நான்கு நாள் பேச்சுக்களை நடத்தத் தயாராக இருப்பதாக நிக்கரகுவா அரசு அறிவித்துள்ளது.

மனுகுவாவரமுடியாது என்ருல் புளோரிடா மாநிலத்தில் உள்ள மியாமி நகரில் பேச்சுக்களை வைத்துக் கொள்ளலாம் என்று நிக்கரகுவா அரசு தெரிவித்துள்ளது.

இதற்கு கொன்ரு தரப்பில் இருந்து பதில் கிடைக்கவில்லை. (எ)

# மாகாணசபைத் தேர்தலைத் திணிப்பது ஜனநாயக நடைமுறை அல்ல

யாழ்ப்பாணம். ஜூன் 27

நிச்சயமற்ற நிலையில் அச்சத்தினுல் வாழுகின்ற மக்கள்மீது மாகாணசபைத் தேர்தலைத் திணிப்பதை ஜனநாயக நடைமுறை என்று கூறமுடியாது.

வடக்கு, கிழக்குப் பிரசைகள் இணைப்புக்குழு, பிரதமர் ராஜீவ் காந்திக்கு சென்ற 22ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது-

அதில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடித விவரம் வருமாறு;

2-6-88 அனுப்பிய கடிதத்துக்கு நீங்கள் அனுப்பிய பதிலில் 20-6-88இல் உங்கள் பிரதிநிதியான லெப் ஜெனரல் ஏ. எஸ். கல்கத்துடன் பேச்சுக்கள் நடத்தும்படி கேட்டிருந்தீர்கள்.

அதன்படி ஜெனரல் கல்கத்தை 20-6-88இல் சந்தித்து அமைதியை நிலைநாட்ட யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேசும்படி கோரினேம்.

இதேபோன்ற பேச்சுக்களை மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே, பிரிகேடியர் காலோன் ஆகியோருடனும் ஏற்கனவே நடத்தியிருந்தோம். சாதகமான பதில் எதுவும் அப்போது கிடைக்கவில்லை.

அதன் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும்வரை இந்திய அமைதிப்படையினரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவதில்லை என்று தீர்மானித்து இருந்தோம்.

### ராஜீவுக்குக் கடிதம்

இருந்தும் உங்கள் அழைப்புக்கு இணங்க உங்கள் பிரதிநிதியை சந்தித்தோம்.

ஆனுல் ஏற்கனவே ஏனைய இந்திய அமைதிப் படை அதிகாரிகள் கொடுத்த மாதிரியான 'ஸ்மூரியோடைப்' பதிலைத்தான் உங்கள் பிரதிநிதியும் தெரிவித்தார் என்பதைத் தெரிவிப்பதில் வருத்தமடைகின்ருேம்.

உங்கள் பிரதிநிதி தெரிவித்த சில கருத்துக்களை மறுப்பதற்கு எமக்கு வாய்ப்புத் தராமல் பேச்சுக்களை உங்கள் பிரதிநிதி முடித்துக் கொண்டார். இது எமது மனதைவருத்துகின்றது.

ஆயுதங்களை ஒப்படைத்து ஜனநாயக வழிக்குத் திரும்பி மாகாணசபைத் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பங்கு பற்றுதல் வேண்டும் என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்.

இதை அடைவதற்குத் தான் உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு நீங்கள் உத்தரவிடவேண்டும் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்றும் வடக்கு கிழக்குத் தமிழ் பேசும் மக்கள் உங்களை வேண்டுகின்றனர்.

நிச்சயமற்ற நிலையில் அச்சத்தினுல் வாழுகின்ற மக்கள்மீது மாகாணசபைத் தேர்தலை திணிப்பதை ஜனநாயக நடை[illegible] யாது.

இந்திய அமைதிப் படையின் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு சகஜ நிலையை திரும்பக் கொண்டுவரக் கோரி வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் பல வழிகள் மூலம் தெரியப் படுத்தி உள்ளனர்.

மக்களின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடவேண்டிய தேவை எமக்கு இல்லை.

### சுதந்திர தேர்தல்

ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகள் களையப் பட்டு அகதிகளை மீளக் குடியமர்த்தி புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னரே சுதந்திரத் தேர்தல் என்பது யதார்த்தமானதாக இருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான இந்திய அமைதிப்படையின் இராணுவ நடவடிக்கையை நிறுத்துவதில் ஏற்படும் தாமதம் நீங்கள் கூறும் ஜனநாயக நடைமுறையைக் கொண்டுவருவதையே மேலும் தாமதப்படுத்தும்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 11 மாதங்களாகிவிட்டன. இன்னும் ஒப்பந்தத்தை ஆக்கபூர்வமாக அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது தாமதமாவது ஒப்பந்தத்துக்கு எதிரான சக்திகள் இயங்குவதற்கு மேலும் வாய்ப்பு அளிப்பதாகவே முடியும்.

### நடவடிக்கைகளை [illegible]

ஆகவே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை நிறுத்திப் பேச்சுக்களை நடத்தக் கூடிய வழி வகைகளைக் காணுமாறு உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

நாம் முன்னர் கூறியபடி இந்திய அரசுடன் பேச்சுக்களை நடத்திய பின்னர் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கு உதவ தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது.

இப்படி வடக்கு கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்து உள்ளது.

இக்கடிதம் லெப் ஜெனரல் கல்கத், மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே பிரிகேடியர் காலோன் ஊடாக பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (இ-எ)

## இதற்கு அனுமதி கோரப்படுகிறது

கொழும்பு ஜூன் 27

ஜனக் கூட்டத்தைக் கட்டுப்படுத்த தண்ணீர்க் கனன்களை (Water Cannon) பாவிக்க அனுமதி அளிக்கும் படி பொலீஸார் அரசாங்கத்தைக் கோரவிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரசின் அனுமதி கிடைப்பின் இதனை இலங்கைப் பொலீஸார் உபயோகிக்க இருப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## ★ சமய சந்நிதிகளில் ★

### நல்லூர் சிவன் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

நல்லூர் சிவன்கோயில் எனப்படும் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீகைலாஸ நாதசுவாமி தேவஸ்தானத்தில் இன்று திங்கட்கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

மூலமூர்த்திக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் காலை 9.23முதல் பகல் 11.23 மணிக்குள் வரும் சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நிகழும். அதைத் தொடர்ந்து பகல் 2 மணி அளவில் மகா அபிஷேகமும் மாலை 4 மணிக்குத் திருக்கல்யாணமும் நடைபெறும்.

மாலை 6 மணி அளவில் எம்பெருமான் வீதியுலா வரும் காட்சியும் நடைபெறும். தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நிகழும். (இ)

### சித்திரத்திருத்தேர் திருப்பணி ஆரம்ப விழா

கிளிநொச்சி இரணைமடு அருள்மிகு ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் சித்திரத் திருத் தேர்த் திருப்பணி ஆரம்பவிழா இன்று திங்கட்கிழமை காலை 9-34 மணிக்கு ஆலய முன்றலில் சிவஸ்ரீ இரத்தினேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

யாழ்- திருநெல்வேலி சிற்பாசாரியர் ஸ்தபதி க. செல்வராசா விழாவை ஆரம்பித்து வைப்பார்.

அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனையும் நண்பகல் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

அத்துடன்தேர்த்திருப்பணிசபை ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது. (இ-76)

### வீரமாகாளி அம்பாள் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன்27

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய ரதோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமைநடைபெறுகிறது.

காலை 7 மணி அளவில் வசந்த மண்டப பூஜை நடைபெற்று 9.00 மணிக்கு அம்பாள் சித்திரத் தேரில்ஆரோகணிப்பார்.

ஸ்ரீ விநாயகர், சுப்பிரமணியர் சகிதம் வீதியுலா வரும் அம்பிகையின்தேர் 10.30மணியளவில்இருப்புக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி அம்பாளின் தேர் வடத்தைப் பெண்களும் பிடித்து இழுக்கப் படுவது குறிப்பிடத்தக்கது.

மாலை 4 மணிக்கு அம்பாளுக்குப் பச்சை சாத்தி விசேட பூஜை நடைபெற்று அம்பாள் தேரிலிருந்து இறங்கி ஆலயம் சேர்வார். (இ)

### சம்பேதுரு பாவிலு ஆலய உற்சவம்

குருநகர் ஜூன்;27

நவாலி தெற்கு சம்பேதுரு பாவிலு ஆலய வருடாந்த உற்சவம் 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாளை 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நற்கருணை வழிபாடு நடைபெறும்.

29-ஆம் திகதி புதன் கிழமை காலை திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்ப்பட்டு திருச்சொரூப ஊர்வலம் இடம் பெறும். (இ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C. S. K.
வேல் படை மருந்து
இப் படை மருந்து
தேமல், கக்கூஸ்பற்று, சொறி,
கரப்பன், சிரங்கு, பூச்சிக்கடி
முதலிய சகல ரணங்களையும்
குணமாக்கும்.
(வெளிப்பிரயோகம்)

# உதயன்

27 - 06 - 1988 திங்கட்கிழமை

சி. எஸ். கே. அலுப்பு மருந்து
இம்மருந்து ஆயுர்வேத மருந்து மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்டது. இதனால் கைகால் உளைச்சல், தடிமல் இருமல், தொண்டைநோ சமியாக்குணம், தேகநோ ஆகியவற்றிற்குச் சுகம் கொடுக்கும் சுடுதண்ணீர், கோப்பி தேனீரில் கலந்து பாவிக்கலாம்
சி. எஸ். கைலாசம்பிள்ளை அன்சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்
5, [76]பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன் : 23135

வெளிநிலைப் பல்கலைக்கழகக் கல்வி
**B. A. 1988 டிசம்பர்**
**G. A. Q. 1989 ஏப்ரல்**
**பொருளியல்**
**S. வரதராஜன்** B. A. (Hons)
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய பிரிவு ஆரம்பமாகின்றது.

3-7-88 ஞாயிறு
B.A. வகுப்பு 8-00 A. M.
G.A.Q. வகுப்பு 3-00 P. M.

★ கடந்த 10 வருட பரீட்சைகளின் வினா - விடை வகுப்பும் இதனோடு இணைந்து நடைபெறும்.
குறிப்பு:- அனுமதி பெற விரும்பும் மாணவர்கள் 3-7-88க்கு முன்னர் தமது பெயர்களைப் பதிவு செய்யவும். இத்திகதிக்குப் பின்னர் வகுப்பிற்கு மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மாணவர்களின் வசதிக்கேற்ப நேரங்கள் தீர்மானிக்கப்படுமாதலால் முதலாவது வகுப்பிற்கு மாணவர்கள் அனைவரும் கட்டாயம் சமுகமளித்தல் வேண்டும்.
(சி 5554)

## வீதி திருத்த வேலைகளுக்கு உடைத்த கருங்கல் வழங்கலுக்கான கேள்வி கோரல்

வட மாகாணத்தில் உள்ள பல வீதிகளைத் திருத்துவதற்குப் பெருந்தொகையாகக் கீழே தரப்பட்ட பருமன்களில் உடைத்த கருங்கல் தேவைப்படுகின்றது.

2" — 3/4" படிமுறைக் கலப்பு (Graded)
3/4" தனிப்பருமன் (Single Size)
1/2" தனிப்பருமன் (Single Size)

இப்பருமன்களில் வாரம் ஒன்றுக்கு வழங்கக் கூடிய கியூப் தொகையும், ஒவ்வொரு வகையிலும் கியூப் ஒன்றுக்கான விலை கூறலும் கோரப்படுகின்றன. கற்களை வாகனங்களில் ஏற்றிச் சென்று பறித்து கியூப் கட்டிக் கொடுப்பதற்கான விலை கூறலும் கோரப்படுகின்றது. முன் கூட்டியே பரிசோதித்து தரம் வாய்ந்ததாக ஏற்கப்பட்ட கற்குவாரிகளில் இருந்தே கல் உடைத்து வழங்கப்பட வேண்டும். வழங்கப்படும் உடைத்த கற்களின் தரமும் காலத்துக்குக் காலம் பரிசோதிக்கப்படும்.

வசதியாகக் காணப்படும் இடங்களில் வெடிமருந்தின் பிரயோகத்துக்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். கல் உடைக்கும் பொறிகள் (Crushers) மூலம் பெறும் உடைத்த கற்களே கூடுதலாக ஏற்கக் கூடியவையாக இருக்கும். தரம் வாய்ந்ததாகக் காணப்படின் கையால் உடைத்த கற்களும் ஏற்கப்படும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுபெற்ற வீதிபராமரிப்பு ஒப்பந்தக்காரரும் (R. M. CC) பெருந்தெருக்கள் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்களில் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரரும் கேள்விகோரலுக்கான விண்ணப்பப் பத்திரங்களைப் பெறத் தகுதியுடையவராவர்.

விண்ணப்பப் பத்திரங்களையும் தேவைப்படும் மேலதிக விபரங்களையும் பின்வரும் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

1. பிரதம பொறியியலாளர் அலுவலகம்
வீதி அபிவிருத்தி அதிகார சபை
யாழ்ப்பாணம்
2. பிரதம பொறியியலாளர் அலுவலகம்
வீதி அபிவிருத்தி அதிகார சபை
வவுனியா

கேள்விப் பத்திரங்களை மேற்கண்ட அலுவலகங்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 1988 யூலை முதலாந்திகதி மு.ப 10-00 மணி வரை வழங்கப்படும்.

கேள்வி 1988 யூலை 12ஆம் திகதி பி.ப 2-00 மணிக்கு மூடப்படும். வடமாநிலப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரைவீதி, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு சீலிடப்பட்ட கடித உறையினுள் வைத்து பதிவுத்தபால் மூலம் 1988 யூலை 12ஆம் திகதி பி ப 2-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது 1988 யூலை 12ஆம் திகதி பி ப 2-00 மணிக்குப் பிந்தாமல் கேள்விப் பெட்டியினுள் போடப்பட வேண்டும்.

சு. பாலேந்திரா
வடமாநில பணிப்பாளர்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.

(C/5520)

## காங்கேசன்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
திய அமைதிப் படையின் நகரக் கொமாண்டர் அலுவலகத்தில் இருந்து விடுக்கப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

காங்கேசன்துறை புனர்வாழ்வு நிலையத்தில் விசேட ஜி சி ஈ (சாதாரண தர) பரீட்சை நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மாணவர்கள் அந்தப் பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுவர்.

பரீட்சைக்குத் தோற்றும் தடுக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது பாடசாலை அதிபர்கள் மாணவர்களுக்குரிய பரீட்சைப் பிரவேசப் பத்திரத்தை புனர்வாழ்வுநிலையத்தின் பொறுப்பு அதிகாரியிடம் நாளை மறுதினம் புதன் கிழமைக்கு (29ஆம் திகதிக்கு) முன்பாக கையளிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் சகல மாணவர்களும் பிரவேசப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டியது அவசியமாகையால் அவர்களின் பிரவேசப்பத்திரங்களைத் தாமதியாது புனர்வாழ்வு நிலையத்தில் சமர்ப்பிக்கவும்.

இவ்வாறு அந்தக் குறிப்பில் கேட்கப்பட்டுள்ளது. (அ)

## இணக்க...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)
கிழமை பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்திப் புதிய முன்னேற்ற நிலை பற்றிய விவரங்களை வெளியிடுவார் என்றும் வேறு சில வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு.டிக்ஸிற் நடத்தும் பத்திரிகையாளர் மாநாட்டில் கூட்டணிப் பிரமுகர்களும், மகாவலி காணி அமைச்சர் திரு. திசநாயக்காவும் கூட இருப்பார்கள் எனவும் சொல்லப்பட்டது. எனினும் அது குறித்து ஊர்ஜிதம்செய்ய முடியவில்லை.

இணக்க நிலை காணப்பட்டால் தேர்தலை நடத்துவதா இடைக்கால நிர்வாகம் ஒன்றை உருவாக்குவதா என்பது குறித்து தீர்க்கமான உடன்பாடு ஏற்படவில்லை என்றும் அது குறித்தே இறுதிக்கட்டப் பேச்சுக்கள் நடந்ததாகவும் அறியவருகிறது.

இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்படும் பட்சத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடம் அளிக்கப்படும் என்றும் மற்றொரு தகவல் தெரிவித்தது.

இதேவேளை இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உடன்பாடு ஏற்படும்பட்சத்தில் புலிகள் தரப்பில் திரு.பிரபாகரன் சார்பில் மற்றொரு பிரமுகர் ஒப்பமிடுவார் எனவும் கூறப்பட்டது. (அ)

## திருமலை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
இடர் இடமாற்ற உத்தரவுகள் அனுப்பப்பட்டு வருகின்றனவாம்.

இதுகுறித்து தமிழ் அதிகாரிகள் பெரும் மனக் கிலேசம் அடைந்துள்ளனர். (ஒ-10)

## அம்பாந்தோட்டையில் புதிய இரசாயன தொழிற்சாலை

### அமைச்சர் டென்ஸில் தகவல்

கொழும்பு ஜூன் 27

புதிய இரசாயனத் தொழிற்சாலையை அம்பாந்தோட்டையில் நிறுவும் சாத்தியக்கூறு இருப்பதாக கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் டென்ஸில் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிக்கமுடியாது நாற்பது ஆண்டு காலமாக இயங்கிவந்த இத் தொழிற்சாலையை இனியும் லாபகரமானதாக இயங்க வைக்க முடியாது- இப்படி உலக வங்கி அதிகாரிகள்குழு அறிவித்துவிட்டதாகக் கூறப்படும் நிலையில் அமைச்சரின் கருத்து வெளியாகியுள்ளது.

பரந்தன் தொழிற்சாலையில் பணிபுரிந்த சுமார் 400 ஊழியர்களுக்குத் தொடர்ந்து சம்பளம் வழங்கப்பட்டுவரும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தொழிற்சாலை மூடப்பட்டதில் இருந்து சம்பளம் மாதாமாதம் ஒழுங்காக வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார். (ஒ-எ)

## தாதிகள்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
றார்.

இந்த நிலையில் தற்பொழுது 75 தாதியர்கள் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

இன்னும் சில மாதங்களில் மேலும் தாதிகள் குழுவினர் பயிற்சிபெற அனுமதிக்கப்படவுள்ளனர்.

இந்த நிலையில் தாதியர்கள் பூரண பயிற்சியைப் பெறமுடியாத கஷ்டம் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என யாழ் சுகாதார அத்தியட்சகர் திரு எஸ். கனகசபை சுகாதார அமைச்சுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-10)

உ
மஞ்சவனப்பதி முருகன் ஆலய
## தர்மகர்த்தா சபை

23-6-88இல் உதயன் பத்திரிகையில் கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களாக அறிவித்தலில் காட்டப்பட்டிருப்பவர்கள் சட்டப்படி தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்ல என்பதைப் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றோம். குறித்த கோவில் யாழ் மாவட்ட நீதிமன்ற வழக்கு இல. T. R. 20இல் பதியப்பட்ட விதிப்பின்படியும், நிர்வாகத் திட்டத்தின் படியும் நிர்வகிக்கப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட தர்மகர்த்தா சபை, குறித்த வழக்கின் நிர்வாகத் திட்டத்திற்கு விரோதமாகவும் தான்தோன்றித் தனமாகவும் செயல்பட்டுள்ளார்கள்.

மு. சிவசுப்பிரமணியம்
சு. பாலசுந்தரம்
(4558) வாக்காளரும், வழிபடுபவரும்.

## ரொப் போட்டோஸ்ரட் பிரதி சேவை

உங்கள் போட்டோஸ்ரட் பிரதிகளை
மிகவும் தெளிவானவைகளாகவும்,
மலிவானவைகளாகவும்
வேகமானவைகளாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

எமது சேவையின் விபரங்கள்

★ சுருக்கப் பிரதிகள்
★ விரிவுப் பிரதிகள்
★ இருபக்கப் பிரதிகள்
★ மறுபக்கப் பிரதிகள்
★ தன்னியக்க வெளிப்படுத்தல்
★ மூவர்ணத்தில் தனித்தனிப் பிரதிகள் (பச்சை, நீலம், கறுப்பு)
★ இறக்குமதி செய்யப்பட்ட கடதாசிப் பிரதிகள்.
★ நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கக்கூடிய பிரதிகள்

நீங்கள் போட்டோஸ்ரட் பிரதியை நாடும்பொழுது "ரொப்" போட்டோஸ்ரட் சேவையையே எந்நேரமும் நாடுங்கள்.

ரொப் போட்டோஸ்ரட் பிரதி சேவை
யூனிவேர்சல் ரெலெக்ஸ்
550, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [4567]

மானிப்பாய் கோவில் பற்று
பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
## வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கத்தில் 4000 (நாலாயிரம்) வெற்றுச் சாக்குகளை விற்பனை செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் 30-06-88 நண்பகல் 12 மணி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவத்தையும், மேலதிக விபரங்களையும் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்
மானிப்பாய் கோவில் பற்று
C5558) பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்.

வடபகுதி வாழ் D. S. .I
பாதணி விற்பனையாளர்களுக்கோர்
## நற்செய்தி

இன்று முதல் ( 25 - 6 - 1988 சனிக்கிழமை) உங்களுக்கு தேவையான D. S. I. பாதணிகளை கொழும்பு செல்லாமல், கொழும்பு விலைக்கே யாழ் நகரில் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம் இராஜேஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ் யாழ்ப்பாணம்.

ஏகவிநியோகஸ்தர்கள்
இராஜேஸ்
டிஸ்ரிபியூட்டர்ஸ்
155, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.
(4542)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்

திரு. ஆறுமுகம் பாலசுந்தரம்
(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம்: 19.6.1919
மறைவு: 29.5.1988

எங்கள் அன்புத்தெய்வம் திரு. ஆ. பாலசுந்தரம் அவர்களது அந்தியேட்டிக் கிரியைகளும் வீட்டுக்கிருத்தியமும் அன்னாரது இல்லத்தில் 29-06-88 புதன்கிழமை நடைபெறும். அத்தருணம் இடம்பெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமதுநன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமதி பா. விமலாவதி (பேபி அன்ரி)
குடும்பத்தினர்
328, பருத்தித்துறை வீதி.
நல்லூர்,
யாழ்ப்பாணம். (4560)

## மரண அறிவித்தல்

### கந்தையா குணரத்தினம்

குணம் என்று அன்பாக அழைக்கப்படும் கந்தையா குணரத்தினம் ஈராக்கில் அகால மரணமானார். இவர் அன்னம்மா காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் அன்பு மகனும், ரேஸ்மலரின் அன்புக் கணவனும் குமாரசாமி, செல்வரத்தினம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகேஸ்வரி, செல்வரத்தினம் கமலவதனு ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக 27- 6- 88 திங்கட்கிழமை பகல் 10 மணி அளவில் K. K. S. ரோட் கோண்டாவில் மேற்கு, நந்தாவில் ஆகிய அவரது இல்லத்தில் இருந்து தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், அன்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. செல்வரத்தினம்
(4758)

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna Monday 27th June 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org